ஆக.7 – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள் பேரணி!

# சென்னை தெற்கு மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன் அழைப்பு!



சென்னை, ஆக. 6-

சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

பதினமூன்று வயதில் பண்பாட்டு தமிழர்களுக்கு தம்மை எடுத்தளித்த ஏந்தல், பதினான்கு வயதில் பகுத்தறிவுக் கொடியேந்தி மொழிப்போர் களத்தில் குதித்து முத்துவேலர் பெற்றெடுத்த செல்வர், ஈராயிரம் ஆண்டுகால தமிழர்களின் இழிவைத் துடைக்க வந்த இனமான அரிமா, ஈரோட்டுச் சூரியனின் கோபநெருப்பை தம் எழுதுகோலில் வாங்கி, இனமானப் போருக்கு வித்திட்ட இயற்றமிழ் வள்ளல், மானமும், அறிவும் திராவிட மண்ணின் சொத்து என முழங்கிய மகத்தான மக்கள் நெஞ்சமெல்லாம் என்றும் நிறைந்திருக்கக்கூடிய மக்கள் தலைவர், தென்னாட்டின் மகத்தான திராவிட புரட்சியாளர் தயாளு அன்னைப் பெற்றெடுத்த தனித் தமிழ் சிகரம், ஐந்து முறை நாடாண்ட அறிவாசான், அன்னைத் தமிழ்நாட்டின் முகவரியாய் விளங்குகிற ஆற்றொழுக்கின் இலக்கணம், பேரறிஞர் பெருந்தகையின் கொள்கைகளை வார்த்தெடுத்த கொள்கைப் போராளி, திராவிட இயல் நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை இந்த மண்ணிற்கு எடுத்தளித்த தியாகசீலர் முத்தமிழறிஞர் கலைஞர் பெருந்தகையின் 8ஆம் ஆண்டு நினைவுநாளில்

ஆகஸ்ட்7, வெள்ளிக்கிழமை அன்று காலை 8.00 மணி அளவில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் சென்னை, அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகிலிருந்து புறப்பட்டு, காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துகிறார். தி.மு.கழகத்தின் முன்னணியினர் பங்கேற்கின்றனர்.

ஆகவே இந்த வரலாற்றில் என்றும் நிலைக்கக் கூடிய இந்நிகழ்வில் சென்னை தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மேனாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாநில கழக நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக செயலாளர்கள், ஒன்றிய கழக செயலாளர்கள், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட, ஒன்றிய அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக சார்பு மன்றங்களைச் சார்ந்தோர், கழக முன்னோடிகள், கழக செயல் வீரர்கள் முதலானோர் திரளாக பங்கேற்றிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

சிறு வணிக நிறுவனங்களை வரிச் சுமையிலிருந்து

# மீட்டெடுக்க ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

## மக்களவையில் தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி!



புதுடெல்லி, ஆக.6-

வருமான வரி துறையில் சம்பளதாரர்கள் மற்றும் சிறு வணிகர்களுக்கு ஏற்படும் வரி சுமையை குறைக்க அரசு மேற்கொண்டுள்ள திட்டங்கள் என்ன என்றும் நடப்பு நிதியாண்டில் வசூலிக்கப்பட்ட மொத்த வரி விவரங்கள் என்ன என்றும் ஒன்றிய நிதி அமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்களிடம் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் பல கேள்விகளை எழுப்பியுள்ளார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு:

நடப்பு நிதியாண்டில் 2026 ஜூலை 13 ஆம் தேதி வரை வசூலிக்கப்பட்ட மொத்த நேரடி வரி வசூல், நிகர நேரடி வரி வசூல் மற்றும் வருமான வரி திருப்பிச் செலுத்தல்கள் (Refunds) ஆகியவற்றின் விவரங்கள் என்ன? மேலும் அவற்றின் தமிழ்நாடு உள்ளிட்ட மாநில வாரியான புள்ளிவிவரங்கள் யாவை?

வேலைவாய்ப்பு உருவாக்கம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் (MSME) வளர்ச்சி, குடும்பங்களின் நுகர்வுச் செலவு ஆகியவற்றைப் பற்றிய தொடர்ச்சியான கவலைகள் நிலவி வரும் சூழலிலும், நேரடி வரி வசூல் அதிகரித்ததற்கான காரணங்களை அரசு ஆய்வு செய்துள்ளதா? அவ்வாறு செய்திருந்தால், அதன் விவரங்கள் என்ன?

பத்திரப் பரிவர்த்தனை வரி (STT) வசூல் அதிகரித்திருப்பதால் சில்லறை முதலீட்டாளர்கள், சிறு வணிகர்கள் மற்றும் பங்குச் சந்தை பங்கேற்பில் ஏற்பட்டுள்ள பாதிப்பை அரசு மதிப்பீடு செய்துள்ளதா? மேலும், தற்போதைய பத்திரப் பரிவர்த்தனை வரி கட்டமைப்பை மறு ஆய்வு செய்ய பரிசீலித்திருந்தால் அதன் விவரங்கள் என்ன?

வருமான வரி திருப்பிச் செலுத்தல்களை (Refunds) விரைவாக வழங்குதல், சம்பளதாரர்கள், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் (MSME) மற்றும் சிறு வணிக நிறுவனங்களின் வரி இணக்கச் சுமையை குறைத்தல், மேலும் டிஜிட்டல் வரிச் சேவைகளை மேம்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் வரி நிர்வாகத்தை வலுப்படுத்த அரசு திட்டமிட்டிருந்தால் அதன் விவரங்கள் என்ன?

இவ்வாறு அவர் கேள்விகளை எழுப்பியிருந்தார்.

ஆகஸ்ட் 7 முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாளை முன்னிட்டு

# திருவள்ளூர் மேற்கு மாவட்டம் முழுவதும் நினைவு நாள் நிகழ்ச்சிகளை நடத்திட வேண்டும்!

## மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் அறிக்கை!



திருவள்ளூர், ஆக.6;

முத்தமிழறிஞர், சமூகநீதியின் காவலர், பகுத்தறிவுப் பகலவன், தமிழினத்தின் ஒப்பற்ற தலைவர், ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று மக்கள் நல ஆட்சிக்கு புதிய பரிமாணத்தை உருவாக்கிய டாக்டர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு, வரும் ஆகஸ்ட் 7ஆம் தேதி திருவள்ளூர் மேற்கு மாவட்டம் முழுவதும் நினைவு நாள் நிகழ்ச்சிகளை நடத்திட வேண்டும் என்று திரு வள்ளூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர்திருத்தணி எஸ்.சந்திரன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழர் வரலாற்றில் என்றும் அழியாத இடத்தைப் பெற்ற மாமனிதர். அவரது அரசியல் வாழ்வும், இலக்கியப் பங்களிப்பும், சமூகநீதிக்கான இடையறாத போராட்டங்களும், தமிழ்மொழி வளர்ச்சிக்காக ஆற்றிய அரும்பணிகளும் தலைமுறைகள் கடந்தும் வழிகாட்டும் கலங்கரை விளக்கமாகத் திகழ்கின்றன. கல்வி, சமூகநீதி, இடஒதுக்கீடு, பெண்கள் முன்னேற்றம், விவசாயிகள் நலன், தொழிலாளர் உரிமைகள், உள்ளாட்சி அமைப்புகளின் வலிமை, தமிழ்மொழி வளர்ச்சி, தமிழர் பண்பாட்டு பெருமை உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் வரலாற்றுச் சாதனைகளைப் படைத்து தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் சென்ற பெருந்தலைவர் கலைஞர். அவர் உருவாக்கிய மக்கள் நலத் திட்டங்களும், சட்டங்களும், கொள்கைகளும் இன்றளவும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான உறுதியான அடித்தளமாக விளங்கி வருகின்றன.

எனவே, அவரது நினைவு நாளை முன்னிட்டு திருவள்ளூர்மேற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்துஒன்றியம் நகர, பேரூர், ஊராட்சி, வார்டு, கிளைக் கழகங்கள் மற்றும் அனைத்து அணிகளும் தங்களது பகுதிகளில் நினைவு நாள் நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும்.

ஒவ்வொரு பகுதியிலும் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்துதல், அமைதி அஞ்சலி நிகழ்ச்சிகள், பொதுமக்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்குதல், அன்னதானம், இரத்த தான முகாம்கள், மரக்கன்றுகள் நடுதல், மாணவமாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல் உள்ளிட்ட மக்கள் நலப் பணிகளை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். மேலும், கலைஞர் அவர்கள் வாழ்நாள் முழுவதும் வலியுறுத்திய சமூகநீதி, சுயமரியாதை, சமத்துவம், பகுத்தறிவு, மதச்சார்பின்மை, மொழி உரிமை ஆகிய உயரிய கொள்கைகளை பொதுமக்களிடம் எடுத்துரைக்கும் நிகழ்ச்சிகளும் நடத்தப்பட வேண்டும்.

இந்தியாவுக்கே முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு உயர்வதற்கான வலுவான அடித்தளத்தை அமைத்தவர் கலைஞர். எனவே, கலைஞரின் நினைவு நாளை வெறும் அஞ்சலி நாளாக மட்டுமின்றி, அவரது இலட்சியங்களை வாழ்விலும், மக்கள் பணியிலும் தொடர்ந்து செயல்படுத்த உறுதியேற்கும் நாளாக ஒவ்வொரு கழகத்தினரும் கடைப்பிடிக்க வேண்டும்.

ஆகையால், திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், முன்னாள் மற்றும் இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், முன்னோடிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள், தொண்டர்கள் அனைவரும் தங்களது பகுதிகளில் பெருந்திரளாகப் பங்கேற்று, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை மக்கள் நலப் பணிகளுடன் எழுச்சியோடு அனுசரிக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் -— காஞ்சிபுரத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 8ஆம் ஆண்டு நினைவு நாள் அமைதி பேரணி - திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் அறிக்கை!



காஞ்சிபுரம், ஆக.6

தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் வரும் 7 ஆம் தேதி அன்று காஞ்சிபுரத்தில் மாபெரும் அமைதி பேரணி மற்றும் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இந் நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகத்தினர் அனைவரும் பங்கேற்றிட வேண்டுமாய் மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் விடுத்துள்ள அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு: -

தந்தை பெரியார் அவர்களின் பகுத்தறிவு கொள்கையை நெஞ்சில் ஏந்தி, பேரறிஞர் அண்ணா அவர்களின் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தி.மு. கழகத்தின் கொள்கையை நெஞ்சில் பதிய வைத்து தமிழ்நாட்டு முன்னேற்றத்திற்காக, தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்காக, தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக தன் வாழ்நாள் முழுவதையும் அற்பணித்த திராவிட இயக்கப் பெருந்தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது பல முன்னோடித் திட்டங்களைத் தீட்டி தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக வழி வகுத்திட்டார்.

கலைஞர் அவர்களின் திட்டங்கள் தமிழ்நாட்டிற்கு ஏன் இந்தியாவிற்கே முன்னோடித் திட்டங்களைத் திகழ்ந்தன. கண்ணொளி வழங்கும் திட்டம், கை ரிக்ஷா ஒழிப்புத் திட்டம், இரவலர் மறு வாழ்வுத் திட்டம், மன்னர் மானியம் ஒழிப்புத் திட்டம், வங்கிகள், பேருந்துகள் தேசிய உடமை ஆக்கும் திட்டம், மாணவர்களுக்கு இலவச பேருந்து பயணத் திட்டம், சுதந்திரத் திருநாளில் மாநில முதல்வர்களே தேசிய கொடியை ஏற்றி வைக்கும் உரிமையைப் பெற்றுத் தந்தார், பெண்களுக்கு சொத்தில் சமஉரிமை, அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம், சத்துணவில் முட்டை, பெண்களுக்கு உள்ளாட்சியில் இடஒதுக்கீடு, அரசு வேலைவாய்பில் பெண்களுக்கு முன்னுரிமை, மகளிர் சுய உதவிக்குழுக்கள், திருமண நிதி உதவித் திட்டம், மகப்பேறு நிதி உதவித் திட்டம், ஏழை எளிய விவசாயிகளுக்கு இலவச நிலம், இலவச மின்சாரம், விவசாயிகளுக்கு கூட்டுறவு கடன் ரத்து, ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய், ரேஷன் கடைகளில் 10 வகையான மளிகைப் பொருட்கள் வழங்கும் திட்டம், அண்ணா நூற்றாண்டு நூலகம், புதிய தலைமைச் செயலகம், அருந்ததியினர், இஸ்லாமியர்களுக்கு உள் ஒதுக்கீடு, மருத்துவம் உள்ளிட்ட உயர் படிப்புகளில் நுழைவுத் தேர்வு ரத்து இப்படி தமிழ்நாட்டிற்கு செய்த திட்டங்களை, தீட்டியத் திட்டங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

குறிப்பாக கலைஞர் அவர்கள் 14 வயது முதல் 95 வயது உரை கடைசி மூச்சு உள்ள வரை உழைத்த உத்தமத் தலைவர் - தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் நம்மையெல்லாம் உடலால் விட்டு 7.8.2018 அன்று பிரிந்தார்.

நம்மை விட்டு உடலால் பிரிந்தாலும் நம் உள்ளத்தில், ஏன் ஒவ்வொரு தமிழரின் உள்ளத்திலும் என்றென்றும் நிலைத்து நிற்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆகஸ்ட் 7 ஆம் தேதி 8 ஆம் ஆண்டு நினைவு நாள் ஆகும். கலைஞர்அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் படி, கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி, காஞ்சிபுரம், காந்தி ரோட்டில் உள்ள தந்தை பெரியார் நினைவு தூணில் இருந்து 7.8.2026 வெள்ளிக்கிழமை அன்று காலை 7 மணிக்கு எனது (மாவட்டச் செயலாளர் க.சுந்தர்) தலைமையில் மாபெரும் அமைதிப் பேரணி நடைபெறுகின்றது.

இந்த அமைதிப் பேரணி தந்தை பெரியார் நினைவுத் தூணில் இருந்து புறப்பட்டு மாவட்டக் கழகம் அலுவலகம் அமைந்துள்ள கலைஞர் பவளவிழா மாளிகையை அடைந்து அங்கு கம்பீரமாக நின்றிருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப் படுகிறது.

எனவே இந் நிகழ்ச்சியில் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர்க் கழக , கிளைக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளிட்டஅனைத்து அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், கழக முன்னணித் தோழர்கள் அனைவரும் 7.8.2026 வெள்ளிக்கிழமை அன்று காலை 6.30 மணிக்கே காஞ்சிபுரம் தந்தை பெரியார் நினைவு தூண் அருகே வருகை தந்தை, நமது அரசியல் ஆசான், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாள் அமைதி பேரணி மற்றும் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சியில் பங்கேற்று, கலைஞர் அவர்களின் புகழ்க்கு மேலும் புகழ் சேர்க்கும் வகையில் அனைவரும் தவறாமல் வருகை தர வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் விடுத்துள்ள அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னை தெற்கில் உதயநிதி ஸ்டாலின் கைதைக் கண்டித்து போராட்டத்தில் ஈடுபட்டு படுகாயமடைந்த

# கழகத்தின் நிர்வாகிகளை மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன் சந்தித்து நலம் விசாரிப்பு!



சென்னை, ஆக.6-

தி.மு.கழகத்தின் இளைஞர் அணி செயலாளர் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (4-8-2026) முகாந்திர மில்லாமல் கைது செய்யப்பட்டு சென்னையிலிருந்து தஞ்சாவூருக்கு அலைத்துச் சென்று அலைக்கழிக்கப் பட்டதைக் கண்டித்து, தமிழ்நாடு முழுவதும் கழகத்தினர் திரண்டு போராட்டங்களில் ஈடுபட்டனர்.

அதுபோது சென்னையில் நடைபெற்ற போராட்டத்தில் சென்னைத் தெற்கு மாவட்டக் கழகத்தைச் சேர்ந்த மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் எம். பார்த்திபன், ஜான்வேல், சிறுபான்மை பகுதி துணை அமைப்பாளர் இருதயராஜ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் த.வீ.தியாகராஜன் ஆகியோர் இல்லத்திற்கு நேரில் சென்ற மாவட்ட கழக செயலாளர் மேனாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களைச் சந்தித்து உடல்நலம் விசாரித்து அளவளாவினார்.

இந்நிகழ்வில் மேனாள் சட்டமன்ற உறுப்பினர், எஸ்.அரவிந்தரமேஷ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பாலவாக்கம் க.சோமு, மாவட்ட துணைச் செயலாளர்கள் பாலவாக்கம் த.விஸ்வநாதன், மு.மனோகரன், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.ஏ. அரிகிருஷ்ணன், எம்.கே. ஏழுமலை, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பா. அருண்குமார், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் சி.பரிமேலழகர், வட்டச் செயலாளர்கள் கே.வி. சாந்தப்பன், க.ஏகாம்பரம், கே.ஆனந்தன், சீனிவாசன், குங்ஃபூ கர்ணா, கே.குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை கைது செய்ததை எதிர்த்து உத்திரமேரூரில் மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் தலைமையில் மறியலில் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கைதாகினர். உடன் ஒன்றிய செயலாளர்கள் கெ.ஞானசேகரன், டி.குமார், பேரூர் என்.எஸ்.பாரிவள்ளல், பேரூராட்சி மன்ற தலைவர் பொன் சசிகுமார், நிர்வாகிகள் தா.சுப்பராயன், ருத்ரகோட்டி ஏ.எஸ். சுந்தர்ராஜன், தே.வீராசாமி, டி.எஸ்.குமார தேவ், கார்த்திகேயன், கெங்கன், மாயகிருஷ்ணன், கோவிந்தராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

வட்டச் செயலாளர் த.மோகன்குமார் எம்.சி. தலைமையில்

# சைதை 168 ‘அ’ வட்டத்தில் கலைஞர் நினைவுநாள் கவியரங்கம்!

## மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைக்கிறார்!

சென்னை, ஆக.6-

த.மோகன்குமார் எம்.சி., தலைமையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8-ம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு சைதை கிழக்கு பகுதி 168 (அ) வட்டத்தில் மாபெரும் கவியரங்கம் மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் தொடக்கி வைக்கிறார்.

தலைமை கவிச்சுடர் கவிதைப்பித்தன், கவிபாடுபவர்கள் நெல்லை ஜெயந்தா, வி.ம.இளங்கோவன், ஆண்டாள் பிரியதர்சினி, இளைய கம்பன் வல்லம் தாஜ்பால் பங்கேற்கின்றனர்.

சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8ம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு 07.08.2026 (வெள்ளிக்கிழமை) அன்று மாலை 6 மணியளவில் வி.ஜி.பி.சாலையில் உள்ள அன்னை வேளாங்கன்னி கலை கல்லூரி வளாகத்தில் கவியரங்கம் நடைபெற உள்ளது.

168 (அ) வட்ட கழக செயலாளரும், 168வது வார்டு மாமன்ற உறுப்பினருமான த.மோகன்குமார் தலைமையிலும், பகுதி கழக செயலாளர்கள் இரா.துரைராஜ் எம்.சி., எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., 168வது வட்ட கழக செயலாளர் நா.ராதாகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையிலும் வட்ட கழக நிர்வாகிகள் ச. சேகர், டி.வி.நரசிம்மன், ஆர். டி.மூர்த்தி, இரா.பால்ராஜ் 168, 168 (அ) வட்ட கழக நிர்வாகிகள், ஏ.சீனிவாசன், த. பாண்டியன், ஜி.என்.நாராயணன், மீனா பரமானந்தம், என்.மேகநாதன், ஜி.வெங்கடேசன், எம்.லிங்கேஸ்வரன், டி.மனோகரன், ஏ.என். காளிஸ்வரன், இ.தனசேகரன், எம்.ராஜி, எஸ.அறிவானந்தம், எஸ்.தேவி, கு.வீராசாமி, கே.ராஜாராம், ஆர்.குப்பன், கு.மோகன், ம.ராஜ்குமார் ஆகியோர் வரவேற்பிலும் கவியரங்கத்தை சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடக்கி வைக்கிறார்.

கவியரங்க தலைமை கவிச்சுடர் கவிதைப்பித்தன் கவிதைப் பாடம் கவிஞர்கள் நெல்லை ஜெயந்தா, வி.ம. இளங்கோவன், ஆண்டாள் பிரியதர்சினி, இளையகம்பன், வல்லம் தாஜ்பால் ஆகியோர் கவி பாடுகின்றனர்.

மேலும் இந்நிகழ்வில் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ச.அரவிந்த ரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் எஸ்.குணசேகரன், க.தனசேகரன் எம்.சி., பாலவாக்கம் க.சோமு, போரூர் எஸ்.அருணாச்சலம், வேளச்சேரி பி.மணிமாறன் எம்.சி., கவிஞர் காசிமுத்துமாணிக்கம், பாலவாக்கம் க.விஸ்வநாதன் எம்.சி., பாலவாக்கம் மு.மனோகரன், வேளச்சேரி எம்.பாஸ்கர் எம்.சி., வாசுகி பாண்டியன்,

பகுதி கழக செயலாளர்கள், ஒன்றிய கழக செயலாளர்கள் கே.கண்ணன் எம்.சி., மு.ராசா எம்.சி., பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன் எம்.சி., வி.இ.மதியழகன் எம்.சி., நொளம்பூர் வே.ராஜன் எம்.சி., கோவிலம்பாக்கம் ஜி. வெங்கடேசன், அயப்பாக்கம் அ.ம.துரைவீரமணி, எம். விநாயகமூர்த்தி, வெ.ஆனந்தம் எம்.சி., பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில துணை செயலாளர்கள் மின்னல் கந்தப்பன், சைதை மா. அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., களக்காடி எல்லப்பன், எம்.எஸ். ஹரிபாபு, ரத்னா லோகேஷ்வரன் எம்.சி.,

சைதை கிழக்கு - மேற்கு பகுதி கழக நிர்வாகிகள் இ.முருகேசன், ஆர்.ராஜ்குமார், மு.ஆரோக்கியம், மு. பாக்கியலட்சுமி, ஆர்.அருணகிரி, டி.என்.சிவமணி, த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதாகௌதமன், வி.பி.ஜானகிராமன், அணிகளின் மாவட்ட நிர்வாகிகள் சைதை சாதிக், நா.மணிகண்டன், அஞ்சல்ராமன், கோ.பாஸ்கரன், கோட்டூர் எஸ்.பிரகாஷ், ஆர்.கிருஷ்ணகுமார், வட்டகழக செயலாளர்கள் எல்.ஆரோக்கியராஜ், இ.வரதன், க.மணி, கோட்டூர் கோ.சண்முகம், நேருநகர் எஸ்.பாட்சா, வெ.முருகன், சை.மு.சேகர், ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம். நாகா, அட்கோகமலநாதன், மாவட்ட பிரதிநிதிகள் என். நந்தகோபால், எஸ்.ராதாகிருஷ்ணன், எஸ்.ஜெ.சலாம், க.உமாபதி, கோட்டூர்ந.பாபு, மு.மகேஷ்லாரான்ஸ், இரா. சுதாபிரியன், ஜி.யோவான், ஜி.செல்வராஜ், வே.ரமேஷ்குமார், கே.எம்.எஸ்.கணேசன், ஏ.மஜித், எஸ்.ரவி, க. ஒப்பில்லாமணி, கு.புகழ்வேந்தன், ஜி.கே.ராமச்சந்திரன். வீ.மதிவாணன், பொன்ஜெய்சிங், ஆர்.ரவி, பால்கார்ரவி, ஜி.பாபு, ஆர்.எல்.காந்தன், த.மணி, உள்ளிட்ட அனைத்து அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி இளைஞர் அணி நிர்வாகிகள், பகுதி துணை அமைப்பாளர்கள், வட்டகழக நிர்வாகிகள், வட்டசெயற்குழு உறுப்பினர்கள், வட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

கூட்டத்தின் நிறைவாக பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் கொடி கே.பாலா, இளைஞர் அணி பகுதி துணை அமைப்பாளர் அருளை மே.குணா, என். சிலம்பரசன், சிறுபான்மை நல பிரிவு பகுதி துணை அமைப்பாளர் எம்.எஸ்.ஷேக் தாவூத், நன்றி கூற உள்ளனர்.